# திருக்குறளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

இரா.தி.சபாபதி மோகன்

**முன்னுரை:** திருக்குறள் உலகப் பொதுமறை. இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றிய சமுதாய இலக்கியம். காற்று, நீர், நிலம் ஆகியவற்றின் விளைவுகளிலிருந்து மனித சமுதாயத்தைக் காப்பதை குறிக்கோளாகக் கொண்டு சுற்றுச்சூழல் திட்டம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது.

ஊலக அளவில் தோன்றிய சுற்றுச் சூழல் பற்றிய முதல் மாநாடு ஐ.நா. பேரவையின் சார்பில் 1972-இல் ஸ்டாக் ஹோமில் நடைபெற்றது. அதில் சுற்றுச்சூழல் தூய்மை பற்றிய பல கருத்துக்கள் விவாதிக்கப்பெற்றன. ஆண்டு தோறும் ஜீன் மாதம் 5-ஆம் நாள் உலகச்சுற்றச் சூழல் பாதுகாப்பு நாளாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

ஊலக அறிஞர்கள் ஆராய்ந்து கூறிய சுற்றுச்சூழல் பற்றிய பல நுட்பமான கருத்துக்கள் திருக்குறளில் கூறப்பட்டுள்ளன. ஆவை பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரை ஆய முற்படுகின்றது.

**சுற்றுச்சூழல்-ஒரு விளக்கம்:** "உயிரினங்கள் வாழும் பகுதியில் உள்ள காற்று நீர் போன்றவை அடங்கிய இயற்கை நிலையே சுற்றுச் சூழலாகும்." 1. மேலும் நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று, நீர், நிலம் ஆகிய மூன்றும் சுற்றுச் சூழல் எனப்படும். இயற்கையில் அமைந்த இவற்றின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டியது மனிதனின் கடமை ஆகும்.

பூமி மனிதனது வாழிடம். நீர் அவன் வாழ்வதற்குத் தேவையானது உணவு, காற்று அவனது உயிர் மூச்சு இம்மூன்றும் தூய்மையாக இருந்தால்தான் மனிதனின் வாழ்வு நல்வாழ்வாக அமையும். எனவே இவற்றை மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது மனிதனின் கடமையாகிறது.

**சுமூகச் சூழல்:** இயற்கைச் சூழலில் வளரும் மனிதன் சூழ்நிலையை தனக்கேற்றவாறு தகவமைத்துக் கொள்கிறான். மலைப்பாறைகளை உடைத்துக் கல்லை எடுக்கிறான் கனிவளத்தைத் தோண்டி எடுத்தப் பயன்படுத்துகிறான். வுலிமை மிகுந்த விலங்குகளைக் கொன்றும், பழக்க முடிந்த விலங்குகளைப் பழக்கியும் வாழ்க்கையை வசப்படுத்திக் கொள்கிறான். இவ்வாறு இயற்கைச் சூழ்நிலையை உருவாக்கும் மனிதன் காலந்தோறும் படிப்படியாக வளர்ச்சி பெற்று சமுதாயத்தை வசதிக்குத்தக்கவாறு பதப்படுத்தகிறான்.

சுற்றுச்சூழல் என்பது புறத்தூய்மையோடு மட்டும் அமைவதன்று. அகத்தூய்மையோடும் தொடர்புடையது. அதுபோன்றே புறத்தூய்மை நிரால் அமையும். அக்தூய்மை வாய்மையால் அமைய வேண்டும் என்னும் வள்ளுவ நெறி நினைவு கூறத்தக்கது. எத்தனை வேகமாக முன்னேறி அறிவியல் பற்பல மாற்றங்களை விளிவத்தக் கொண்டிருந்த போதிலும் திருக்குறள் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள் பல அவற்றில் இணைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஏனென்றால் அக்கோட்பாடுகள் என்றும் மாறாதவை: மறையாதவை. மக்களினம் பின்பற்றுவகற்கான வழி முறைகளைக் காட்டுபவை.

**தமிழகச் சுற்றுச்சூழல் குழு:** தமிழக சுற்றுச்சூழல் குழு 19.2.1982-இல் அமைக்கப்பெற்றது. இக்குழு திருவள்ளுவரின் கோட்பாட்டில் உள்ள உண்மைகளை உணர்ந்து தனது வெளியீட்டில் திருவள்ளுவர் உருவப் படத்தையும் 737-வது குறளையும் இணைத்தது.

இச்சுற்றுப்புறச்சூழல் 1.11.87-இல் ஒரு மிதிவண்டிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தது. ஆதில் கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் 'திருக்குறள் நம்மறை' என முழங்கிய வண்ணம் மேற்குத் தொடர்ச்சி மலை வரைக் கால்நடைப் பயணமாகக் கன்னியாகுமரியில் இருந்து கோவா வரை சென்று வந்தனர்.

**இயற்கையும் செயற்கையும்**: மனிதன் எத்துணை வேகமாக அறிவியல் ஏற்றம் பெற்றாலும் இயற்கையோடு இணைந்தே தனது ஏற்றத்தைச் செயல்படுத்த வேண்டும் இல்லையேல் வீழ்ச்சியடைவான். இதை,

"செயற்கை அறிந்த கடைத்தும் உலகத்து

இயற்கை அறிந்து செயல்"

என்னும் குறட்பாலில் திருவள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார். இக்குறள் அமைச்சரின் இயல்பைக் கூற வந்ததாயினும் அனைவருக்கும் பொருந்தும் கோட்பாட்டை உள்ளடக்கியது என உணர்க.

**மழை:** மழை இயற்கைப் பொருள். பேய்யும் காலத்துப் பெய்யும், பெருமழையில் உலகம் தளிர்கின்றது: செழிக்கின்றது. மழையின் அருமையினைக் கருதிய வள்ளுவர் அதனை அமிர்தம் எனக் குறிப்பிட்டுள்ளதை,

"வானின்று உலகம் வழங்கி வருதலால்

தான் அமிழ்ழூதம் என்றுணாற் பாற்று"

எனவரும் குறட்பா கூறுகின்றது. மழை இன்றேல் விளைவு இல்லை. விளைவு இன்றேல் உணவு இல்லை. உணவு இன்றேல் உயிர் இல்லை. இதனை மேகம் மழை பெய்யாவிடில் நிலத்தில் பசும்புல்லும் இராது என்பதனை,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

என வள்ளுவப் பெருந்கதைக் குறிப்பிட்டுள்ளார். மழை இன்றேல் நீர் இல்லை. எனவே தான் திருக்குறளில் கடவுள் வாழ்த்திற்கு அடுத்த நிலையில் வான்சிறப்பை வைத்து மழையின் தேவையைக் குறிப்பால் பெறவைத்தார் வள்ளுவர்.

இளங்கோ அடிகளும் மழையை வணங்கிப் போற்றும் வகையில்,

"மாமழைப் போற்றுதும் மாமழைப் போற்றுதும்"

என்றார்.

**நீர்:** "இயற்கையின் சக்திகள் செயல்படுவதற்கு இன்றியமையாத ஒன்று தண்ணீர் ஆகும். தண்ணீர் இல்லாவிட்டால் எவ்விதமான உயிர்ச் சேர்க்கைகளும் நடைபெறாது. உயிரினங்கள் வாழ முடியாது. அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படும் நீர். இத்தகைய நீர் இல்லையேல் உலகமில்லை என்றறிருந்து காடுகளின் அழிவால் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகின்றது. இதனை வள்ளுவர் அன்றே அறிந்து மானிட வர்க்கத்துக்கு அன்றே எச்சரிக்கை வகுத்துள்ளதை "நீரின்றி அமையாது உலகு" என்பதனால் அறியலாம். நீரின் தூய்மையைக் காப்பாற்றுவது சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பு மக்கள் பெருக்கம், தொழில் வளர்ச்சி இவற்றின் காரணமாக நீர் தூய்மை கெடுவதை தவிர்க்கப் பாடுபடுகிறது பாதுகாப்புக் கழகம்.

"ஊருணியின் கரைகளில் நிழல் தரும் மரங்கள் இருந்தமையை, நீரம் நிழலது இனிதே" என்ற தொடர் வலியுறுத்துவது உண்மையாகும். நிழலும் நீரும் இன்பம் தராமல் இன்னா தருமாயின் அவை இன்னாதனவே என்ற கருத்தையும் திருக்குறள் வலியுறுத்துகின்றது. எனவே சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பாளர்கள் முதன்மையாகப் போற்றும் நீரின் தூய்மையைப் பாதுகாப்பதைத் திருக்குறளும் வல்யுறுத்துவதை அறியலாம்.

**நீர்த் தூய்மை:** ஒரு கிராமத்தில் குடிநீர்குளம், குளிநீர்க்குளம் என்று தனித்தனியாக நீர்க்குளங்கள் இருக்கும். சில கிராமங்களில் குடிநீரும், குளிநீரும் இரண்டும் முகர்ந்துக் கொள்ளும்படி ஒரு குளம் இருப்பதும் உண்டு. பலவகை நோய்கள் உண்டாவதற்கு இதுவே காரணமாகின்றது. சுற்றுப்புறப் பாதுகாப்புக் கழகம் இதனை வன்மையாக மறுக்கின்றது. தூய்மையை வற்புறுத்துகின்றது. திருவள்ளுவர் "புறத்தூய்மை நீரால் அமையும்" என்னும் தொடர்களில்,

"விண் பொய்ப்பின் உலக

உயிர்களைப் பசி உள்நின்று வருத்தும்"

இவ்வெச்சரிக்கையை விடுகின்றார்.

**நிலம்:** 'நிலத்தியல்பால் நீர்திரியும்' என்பது அறிவியல் உண்மை. எனவே நிலத்தின் வளம் காக்கப்படுவது அவசியமாகின்றது. சுற்றுச்சூழல் அழிவிற்குத் தன்னலமும் சால்பின்னையுமே காரணமாகின்றன.

சால்பு என்பது சான்றாண்மை. சான்றாண்மை குன்றினால் இந்நிலம் மக்களைத் தாங்காது என்பர் வள்ளுவர்.

> “சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
> தாங்காது மன்னோ பொனா”

என்பது அவர் வாக்கு. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு சால்பும் இன்றியமையாதது என்பதை இக்குறள் புலப்படுத்துகிறது.

**அரண்:** நிலம் என்பத மண், நீர், காடு, கடல், ஆறு, குளம் போன்றவைகளையும் உயர்திணை, அ.'.றிணை கொண்டு அமைந்துள்ளன. பூமியினை ஆங்கிலத்தில் உயிரினக்கோளம் என்பர். நூம் பயன்படுத்தப்படும் நீர் தூய்மை உடையதாக இருத்தல் வேண்டும். பல நோய்கட்கு அடிப்படையாக இருப்பது நீர், உயிர்வளர்க்க, உடல் தூய்மைக் காக்க நீரின் பயன்பாடு அதிகமாகும். இதனையே வள்ளுவர் மணிநீர் என்றார். தேளிந்த, தூய நீர் என இதற்குப் பொருள்படும்.

செயற்கை உரங்களாலும் அளவுக் கதிகமான பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் மண்ணில் மீண்டும் மீண்டும் வேளாண்மைச் செய்வதால் இன்று மண் பதர் ஆகிவிட்டது. நிலம் மாசுறுகின்றது. எனவே வளம் கொதிக்கும் மாசிலா நிலம் வேண்டும் என்பது வள்ளுவரின் எண்ணம். முனித உயிர்களும் அ.'.றிணை உயிர்களும் உயிர் வாடி, உலக வெப்பம் குறைய வளம் நிறைந்த காடுகள் வளர்க்கப்பட வேண்டும். இக்கருத்துக்களை நன்கறிந்த வள்ளுவர்,

> “மனிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
> காடும் உடையது அரண்”[9]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருக்குறள் கூறும் அரண் இலக்கணம் அறிவியல் வளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்திற்கு ஏற்குமா என்று வினவுர். அதிலும் ஓரளவு உண்மை உள்ளது என்றாலும் காடுகளை அரணாகக் கொண்ட வியட்நாம் பகுதியை அமெரிக்கா படைகளால் வெற்றி கொள்ள முடியவில்லை என்பது நினையத்தக்கது.

காடுகளை அழித்து வீடு கட்டுகின்றனர். இவ்வழிவினால் கரியமிலவாயு மிகுந்து பூமியில் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும். வெப்பம் மிகுவதால் கடல்நீர் உயரும். இதனால் மாலத்தீவு போன்றவை கடலில் மூழ்க நேரிடும். திருக்குறள் கூறும் அணிநிழல் காடும் வளமிக்க மலைகளும் இருப்பின் நாடு எத்தகைய வளமும் பாதுகாப்பும் பெறும் என்பதனை அறிவோம்.

**மரம்** : “மரங்கள் நிழலைத் தருகின்றன. மழை வரக் காரணமாகின்றன என்பதோடு மாசு நிறைந்த காற்றினை மாசு களைந்து தூய்மைப்படுத்துகின்றன என்பதும் அறியத்தக்க செய்தி. காற்றில் கலந்து வருகிற கார்பன்-டை-ஆக்ஸைடு என்று நச்சுக்கழிவு நீங்கவதற்கு அதைத், தாமே சுவாசித்துச் சுத்தப்படுத்துவது மரங்களின் வேலையாகிறது.”[10]

இதனை நன்குணர்ந்த மக்கள் சுற்றுச்சூழல் தூய்மைக்கும் நிழலுக்கும் மரங்கள் நடுகின்றனர். மரம் நடு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. காடுகள் வளர்ந்தால் உலகின் வெப்பம் குறையும். மழை, பனி, வெப்பம் போன்ற சூழல் சமன் நிலைகள் சரியாக இருக்கும். நிலச்சரிவுகளும் மண் அரிப்புகளும் ஏற்படாது. இதனை நன் குணர்ந்து வள்ளுவர் மக்கள் மரங்களையும் வளர்ப்பதில் அக்கறை கொண்டிருத்தல் வேண்டும் என நினைந்த வள்ளுவர் நடப்படும் மரங்கள் பயன்தரும் பழமரங்களாக-மருந்து மரங்களாக இருக்க வேண்டும். நச்சு மரங்களாக இருக்கக் கூடாது என்கிறார்.

> “பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்”

என்னும் தொடரால் அறியலாம். நச்சு மரங்கள் தீயவினையை உண்டாக்கும் என்றும் சுற்றுப்புறச் சூழலாரின் கொள்கையை,

> “நச்சுப் படாதவன் செல்வம் நடுவூள்
> நச்சு மரம்பழுத் தற்று”

எனவரும் குறட்பாக்களால் அறியலாம்.

"வனங்கள் ஒருநாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு கட்டாயம் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் போவதால் நாட்டின், உலகின் சுற்றுச் சூழல் பாதிப்படைகிறது."[12]

"தெருவெலாம் மரம் வளர், தீங்கனி வகை விளை" என்பார் பாவேந்தர். தெருவின் இருமருங்கினும் தேன் கனி தரும் மரங்களையும், நிழல்தரும் மரங்களையும் வளர்க்க வேண்டும். வாழை, மா, பலா, ஆகிய முக்கனி தரும் மரங்களையும், விளா, கொய்யா, ஆரங்சு, ஆப்பில் எனும் பயன் மரங்களையும் உயிர்ப்பிக்குதல் வேண்டும்."[13]

"வனம் அழிந்தால் வான் பொய்க்கும்
வான் பொய்ப்பின் வளம் குன்றும்
வளம் குன்றின் உயிர்கள் அழியும்"

என்பதை மானுடம் உணர்தல் வேண்டும். இதுவே வள்ளுவம் நமக்குச் சொல்லும் பாடம்.

**மூலிகை வளங்கள்:** இந்தியாவில் மட்டும் 2000-க்கும் மேற்பட்ட மூலிகைகள் மருந்தப் பொருள்களாகின்றன. ஆரம்பச் சுகாதார காரணங்களுக்காக, உலகச் சமூகங்கள் 80% மூலிகைகளை நம்பியுள்ளன. சுடுகாட்டுச் செடி என்று அழைக்கப்படும் (catharonthis rosea) லுக்கியா எனும் புற்றுநோயைத் தீர்க்கவல்லது. மெக்ஸிகன்யாம் எனும் தாவரம் மகப்பேறு தடுபபு மருந்தாகப் பயன்படுகிறது. இத்தகைய மூலிகைகளின் பயன்பாடுகளை அன்றே வள்ளுவப் பெருந்தகை உணர்ந்த நிலையில்,

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால்"

எனக் குறிப்பிடுகிறார். மருந்து மரத்தின் பட்டை, வேர், இலை, தழை, பூ, காய், கனி ஆகிய அனைத்து உறுப்புகளும் மனித குலத்திற்கு மருந்தாகப் பயன்படுவதை அறியலாம். எனவே மூலிகை மரங்களை நாட்டில் சுற்றச்சூழல் பாதுகாப்பதற்காகவும், மனிதகுல மேம்பாட்டிற்காகவும் மருந்து மரங்கள் வளர்த்தல் அவசியம் என்பது அறியப்படுகிறது.

**முடிவுரை** : இவற்றை நோக்குமிடத்து, இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குத் திருக்குறள் கருத்துக்கள் பெரிதும் துணை செய்வன என்பது புலப்படுகின்றது. எல்லா நிலைகளிலும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றிமை வேண்டும். அதுவே பண்பாடு. அதுவே உலகம் இன்பமாக வாழ்வதற்கு வழி என்பதை உணர வேண்டும். எனவே குறள் கூறும் நெறிப்படி சுற்றுச்சூழலைப் பாதுகாத்து நாட்டிற்கும் நமக்கும் நன்மை பயப்போமாக!

**அடிக்குறிப்புகள்:**

1. குறள் 637, 11, 16, 20, 990, 298, 990, 742, 216, 1008, 217.
2. சுற்றச்சூழல் பாதுகாப்பு, ப. 8, ப. 265.
3. கழிவுநீர் சுத்திகரிப்பும் உயிர் இனங்களும், ஜே.என். இராமசாமி.
4. மரம் வளர்ப்போம் உயிர் வாழ்வோம், க. அன்புகங்கா, அணிந்துரை.
5. ஆத்திச்சூடி, பாரதிதாசன், பக். 18-19.
6. சிலப்பதிகாரம், பதிகம்.